

மாஸ்கோவில்
மாஸ்டர்!
லயன்
காமிக்ஸ்
ரூ.
2.50
முழுநீளச் சித்திரக்கதை!

# D.ஜான்மாஸ்டர் சாகஸம்!





த டென்னிஸ் ஆட்டக்காரரான ஜான் மாஸ்டர்
ளவுத்துறைக்காக அவ்வப்போது இரகசியப்பணிகளை
துண்டு. ராபின் அவருடைய சகா. அமெரிக்கா சென்
களிருவரும் ஒரு கேளிக்கை அரங்கில் உல்லாசமாகப்
கிக் கொண்டிருந்தனர்...


ஆவ்...! தலைகுப்புற கீழே பாய்வதுபோல்... என்ன ஜோராய் இருக்கிறது!
பெட்டி, தடத்திலிருந்து கழன்று கொள்ளாதிருந்தால் சரி!


ஹாம்...தாங்காதப்பா - இது எனக்கு!
சரியான தொடைநடுங்கி!
நான் ரொம்ப இரசித்தேன்! அடுத்து...'திகில் பயண' அரங்குக்கு செல்வோமா!
கொஞ்சம் பொறு... என் தலையும், வயிறும் இன்னமும் சமனப் படவில்லே!


6
ராபின்:..! உன்னளவுக்கு மனஉறுதி படைத்த நபரை இதுவரை நான் கண்டதேயில்லை!
பிரபல டென்னிஸ் வீரன் நீ...உனக்கு உடலுறுதியோடு மன உறுதியும் அவசியம்!
அவர்கள் பயணச்சீட்டை வாங்கிக் கொண்டிருந்த போது-
ஆபத்து ஆபத்து! யாராவது ஓடிவந்து உதவுங்களேன்!
GHOST
ராபின்... ஓடிவா!


திடீரென்று தலை தொங்கிப்போய் விட்டது...!
கலவரமடையத் தேவையில்லை... வெறும் மயக்கமாகவும் இருக்கலாம்!
இல்லை ஜான் - இறந்து விட்டார்...!


கொலைகாரன் இன்னமும் உள்ளேதான் இருக்க வேண்டும்...வா - போகலாம்!
இரண்டு வாயில்கள் இருக்கின்றன...நான் இந்த வழியாக நுழை-கிறேன்- நீ அந்தவழி யாக வா...!


ஆனால் உள்ளே -
ஒரே கும்மிருட்டு!
மிகுந்த எச்சரிக்கையோடு பதுங்கிப் பதுங்கி முன்னேறினார் ஜான்...
ஈஈயீயீ ர்ர்ர்!
சனியனே - இங்கே உன்னைத்தேடிக் கொண்டு வரவில்லை நான்! பேசாமல் கிட....!



அங்கே ராபினுக்கும் அதே பிரச்னைதான்-
ஐயோ!
உவ்,...வாவ்...வீவீவீ!
சே...படுபயங்கர மான இடம் இது...
யாரேனும் இங்கே ஒளிந்து கொண்டிருந்தால், இப்படி பின்னோக்கி நகர்வதன் மூலம் அவர்களை நான் முட்டாளாக்கி விடமுடியும்!


மறுவிநாடி-
ஆ...வ்!
ஊய்ய்!
அட...நீதானா-
பயந்தே
போனேன்!
நம்மைத் தவிர வேறு
யாரும் இங்கே இருப்ப
தாகத் தெரியவில்லை!
10


ஜான் மாஸ்டரின் அந்தக்
கணிப்பு - தவறு.
அந்த ராட்சஸ உருவச்
சிலை நம்மீது சரிகிறது
பார்...விலகி ஓடு
ஜான்!
யாரோ அதை நம்மீது
தள்ளிவிட்டிருக்கிறார்கள்...


அஹ்...!
குட்!
ஹே...யாரங்கே! நீ வீழ்த்தியது எங்களில் ஒருவரைத் தான்...தைரியமிருந்தால் நேருக்கு நேர் வா - மோதிப் பார்த்து விடலாம்!
அப்போது-
அட...அசுர கதியில் என்னை நோக்கி ஓடி வருகிறதே!


பாதையிலிருந்து விலகிக் கொள்ளக்கூட அவகாச மில்லை...


பாய்ந்து இப்படி தொற்றிக் கொண்டால் ஒருவேளை தப்பிக்கலாம்!


வெளியே காத்துக் கொண்டிருந் தவர்கள் அதிர்ச்சியடைந்தனர்...


கொலைகாரன் உள்ளே-தானிருக்கிறான்...
இம்முறை அவன் என்னிடமிருந்து தப்ப முடியாது!
ஹே...சைத்தானே! உயிரோடு நான் திரும்பவும் வந்து விட்டேன் பார்த்தாயா...உன் பாச்சா பலிக்காது என்னிடம்...


சட்டென்று பளிரிட்டது அங்கே.
ஸாரி...டிராகுலா! நான் உன்னைத்தேடி வரவில்லை-தெரியாமல் குறிவைத்து விட்டேன்!


அதோ...அவனாகத் தானிருக்கும். நான் தேடி வந்த ஆசாமி! கையில் துப்பாக்கி வைத்திருக் கிறான்...
ஓடுகிறான்...காரிருளில் கண் தெரியவில்லை!


அங்கே நுழைந்துகொண் டால் தப்பிவிடலாம் என்று கனவு காணாதே!
உள்ளே புகுந்த இருவருக்குமே பேரதிர்ச்சி...
டுமீல்! டுமீல்!
துப்பாக்கி சுடும் போட்டி அரங்கில் ஆபத்தான முனையிலிருந்தார்கள் அவர்கள்.


ஹே...அங்கே திடும் என இரண்டு தலைகள் தெரிகின்றன பார்!
சும்மா சுடு...! அவை வெறும் எலக்ட்ரானிக் தந்திர வேலையாக இருக்கும்!
சீறிக்கொண்டு வந்த தோட்டாக்களின் இலக்கிலிருந்து தப்ப தரையோடு தரையாக பதுங்கிக் கொண்டனர்.


நழுவப் பார்க்கிருன்...!


தலைதெறிக்க ஓடுகிருனே-
ரக்பி ஆட்டத்தில் சூரன் நான்
என்று காட்ட அருமை
யான சந்தர்ப்பம்...!


ஒரே பாய்ச்சலாக பாய்ந்தார் ஜான் மாஸ்டர்...
உப்ப் . ப்!


ஓ. கே! இப்படி துணியைப்போட்டு மறைத்துக் கொள்ளும் அளவுக்கு அத்தனை மோசமாகவா இருக்கிறது உன் மூஞ்சி என்று இப்போது பார்த்து விடலாம்!


முட்டாள்...! எல்லாவற்றையும் ஒரேயடியாக கெடுத்துத் தொலைத்துவிட்டாயே...
நன்றாக இருக்கிறதே கதை! அந்த ஆசாமியை கொலை செய்து விட்டு இப்போது என்ன நாடகமாடுகிறாய்?
நான்சென்ஸ்...! இதைப்பார்-புரியும் உன் மரமண்டக்கு!


GOVERNMENT OF THE UNITED STATES OF AMERICA
CIA
AGENT No.
குறுக்கே புகுந்து குளறுபடி செய்த உன்னை, இந்த நாட்டு நலனுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கியதாக குற்றம் சாட்டி இப்போதே கைது செய்கிறேன்...!


ஏறுங்கள் வண்டியில்...விசா-
ரணையை போலீஸ் ஸ்டேஷனில்
வைத்துக் கொள்வோம்...
கொஞ்சம் நான்
சொல்வதை
கேளுங்கள்...


ஊஹூம்...சொல்ல வேண்டி
யதை நீ அங்கே வந்து
சொல்?
அதுவரை வாயை மூடிக்
கொண்டு வா! அதுதான்
உனக்கு நல்லது!
CAL 2791



உள்ளூர் காவல் நிலையத்தில்...
ஓகோ...ஒரு ஆசாமி கொலை செய்யப்பட்டிருக்கிறார்...நீங்கள் அந்தக் கொலையோடு சம்பந்தப்பட்டிருக்கிறீர்கள்!
அர்த்தமற்ற குற்றச்சாட்டு!
நான் சொல்வதை சற்று செவிமடுத்தால் நன்றாக இருக்கும்...முதலில் நாங்கள் யார் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்!
தங்களுடைய அடையாள அட்டையை எடுத்து நீட்டினர் ஜானும், ராபினும்
GOVERNMENT OF GREAT BRITAIN
This identifies John Master
AS A MEMBER OF BRITISH INTELLIGENCE
உங்கள் குரங்கு வேலைகளை உங்கள் நாட்டு எல்லைக்குள் மட்டுமே வைத்துத் தொலைத்துக் கொள்வதுதானே!
ஒரு கொலையை நேரில் பார்த்த பிறகும் எப்படி சும்மா இருப்பது...


முதுகில் கத்தி குத்தப்பட்ட நிலையில் ஓர் ஆசாமி-
யையும் பீதியில் அலறிக்கொண்டிருந்த ஒரு
பெண்ணையும் சுமந்து கொண்டு மினி-
ரயில் வெளியே வந்தபோது
நாங்கள் அங்கே
நின்றுகொண்டிருந்தோம்.
உடனே கொலைகாரனை
முயற்சியை மேற்கொண்டோம்
அகப்பட்ட நபர்-உங்கள் ஆசாமி
தான். கொலையை அவர்தான்
செய்திருக்க வேண்டும்...
ஏனெனில் உள்ளே வேறு
யாருமே கிடையாது!


முட்டாள்தனமாகப் பேசாதே... நன்ருக யோசித்துப்பபார்...! எங்கள் ஆசாமியை கண்டு பிடித்த பின் 'திகில் பயண' அரங்கின் முகப்புக்கு வந்த போது மாயமாக மறைந்து விட்டிருந்த நபர் யார்?



அந்தப் பெண்!... அவள்தான் கொலையாளி!


அவள் வேற்று நாட்டு ஒற்றர் படையை சேர்ந்தவள்... எங்களுக்கு முக்கியமான தொரு தகவலை எடுத்து வந்த நபரை கொலை செய்ய என்று அனுப்பபட்டவள்.
அந்த ஆசாமியிடமிருந்து தகவலை பெற்றுக்கொள்ளவே எங்கள் உளவாளி அங்கே மறைந்திருந்தார்... துரதிர்ஷ்டவசமாக அந்தப்பெண் முந்திக்கொண்டு விட்டாள்!
உங்களுடைய முட்டாள்தனமான செய்கையினால் அவள் சுலபமாக தப்பிச் சென்று விட்டாள்... என் கண் முன்னே நிற்காதீர்கள்- போய்த் தொலையுங்கள்! பீடைகள்!
புத்திசாலித்தனத்தை டென்னிஸ் ஆட்டத்தில் காட்டுவதோடு நிறுத்திக்கொள்!


மறுநாள்-ஜான் மாஸ்டர் பங்கேற்ற முக்கியமான டென்னிஸ் போட்டி ஒன்று நடந்து கொண்டிருந்தது.


மாஸ்டருக்கு "ஏஸ்"!
மிகப் பிரம்மாதமாக ஆடினாய் தோழனே...!
உன்னோடு ஆடக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்திற்காக சந்தோஷப்படுகிறேன்!


ப்பூ...! டி. வி காமிரா வெளிச்சத்தில் ஆடும்போது உடம்பு என்னமாய் சூடேறிப்போகிறது!
அப்போது கிட்டே நெருங்கி வந்தான் ஓர் ஆசாமி..
கவனமாக கேட்டுக்கொள்... CIA க்கு நீ கடன்பட்டிருக்கிறாய்! பிரதியுபகாரமாக எங்களுக்கு நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்... ஒரு மணி நேரம் கழித்து பிரதான வாசலுக்கு வெளியே என்னை வந்து சந்தி-தனியாக வா!


அதன்படி—
யாரையும் காணோமே இங்கே-
ஏமாற்று வேலையோ?


ஆங்...அதோ அங்கே-
கும்மிருட்டான இடத்தில்
நிற்கிறான்!


ஆவ்...எ...என்ன இதெல்லாம்?
வாயை மூடு...சுகமான தூக்கம் போடப் போகிறாய் அவ்வளவுதான்!
மறுபடியும் ஜான் மாஸ்டர் கண் விழித்தபோது தான் நெடு நாளாக சுயவுணர்விழந்து கிடந்த பிரமை ஏற்பட்டது. அதை அவர் ரசிக்கவில்லை...!
ஹே...என் இங்கே ஒரே கும்மிருட்டாக இருக்கிறது?
32


அப்போது எதிரே வந்து நின்ற மனிதனை வெறுப்போடு பார்த்தார் ஜான் மாஸ்டர்...
அலட்டிக் கொள்ளாதே...ஒருவேளை நீ இங்கே வர சம்மதிக்க மாட்டாயோ என்ற சந்தேகத்தினால்தான் தூக்க மருந்தை ஏற்றினோம்



தன் வெறுப்பை ஆத்திரத்தை செயலில் காட்டினார் ஜான் மாஸ்டர்.
ஊப் ப்!



சட்டென்று தன்னை குறி வைத்து ஒரு துப்பாக்கி நீண்டபோது இங்கே எதுவும் தன் இஷ்டத்துக்கு நடக்கப்போவதில்லை என்பதை தீர்மானமாக புரிந்து கொண்டார்...
ரொம்பவும்தான் துள்ளுகிருய்...புத்திசாலியாக இருந்தால் இத்தோடு நிறுத்திக் கொள்வாய் என நம்புகிறேன்!
வேடிக்கை-விளையாட்டு...போதும்! ஆசாமியை உருப்படியாக விட்டு வையுங்கள்...அவனுல் நமக்கு ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது!


நேற்று எங்களுடைய முயற்சியில்
குறுக்கிட்டு கொலையாளி தப்பிச்
செல்ல காரணமாகி விட்டாய...
அதற்கு ஈடுகட்டும் வகையில்
நீ ஒரு காரியம் செய்ய
வேண்டும் எங்களுக்காக ..
அதாவது
CIA க்காக...






கிழக்கு ஐரோப்பாவில் நீ
டென்னிஸ் ஆடச் செல்-
கிறாயல்லவா....அப்போது
ஒரு சிறு பார்சலை எடுத்
துச்சென்று நாங்கள்
குறிப்பிடும் நபரிடம்
ஒப்படைக்க வேண்டும்-
அவ்வளவுதான்...!
மேலெழுந்த வாரியாக
மிகச்சுலபமான
பணியாகத்தான்
தோன்றுகிறது. .!


ஹூம்...கஷ்டமான பணியாக இருந்-தாலும்தான் என்ன.
புத்திசாலி...எங்களை சரியாக புரிந்து கொண்டாய்!
ஆனால்...நிலைமை சட்டென்று தலைகீழாக மாறிப்போனது.
ஆஆ...!



வந்தவன் வேறுயாருமல்ல-ராபின்தான்...!
இந்தா முகமூடி!
மயக்க வாயு குண்டை வீசியிருக்கிறேன்!
மறு நிமிடம் 'ஸ்கோர்' இங்கிலாந்து 5, அமெரிக்கா 0 என்றாகி விட்டது.
ஆட்டம், செட்... நமக்கு!
மாட்சும் தான்!
என்னுடைய சமீபத்திய கண்டுபிடிப்பான 'ஒற்றை நபர்-மீட்பு ஏவுகணை' யை நடைமுறையில்-பரீட்சிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது!
நான் உங்களுக்கு கடன்பட்டி-ருப்பது உண்மைதான்...அதை சரிசெய்ய நீ சொன்னதுபோல் பார்சலை கொண்டுபோய் உரியவரிடம் சேர்ப்பிக்கிறேன்! புரியுதா?


அடுத்த சில நாட்களுக்கு மாஸ்டரின் கவனம் டென்னிஸ் மீத இருந்தது... எத்தனைதான் திறமையான ஆட்டக்காரராக இருந்தபோதிலும் அந்த போட்டித் தொடரில் இறுதி ஆட்டம் வரை வர ஜான் மாஸ்டர் மிகுந்த பிரயாசைப்பட வேண்டியிருந்தது.
அத்தோடு சரி... முதல் செட்பில் வாக்கருக்கு- ஆறுக்கு...ஒன்று!
அந்த பிரிட்டிஷ்காரனை சும்மா நொறுக்கித் தள்ளிவிட்டான்!
திடீரென்று உடம்பிலிருந்து சக்தியெல்லாம் வடிந்து விட்டதுபோல் தளர்ச்சியடைந்து விட்டேனே! ஜெயிப்போம் என்ற நம்பிக்கை ஏற்படவில்லையே!
இரண்டாவது செட்டிலும் நிலவரம் அப்படித்தான் இருந்தது.
ஆட்டம் வாக்கருக்கு... நான்குக்கு-பூஜ்யம்!


முடிவில்...
ஆட்டம்...செட்...மாட்ச்-வாக்கருக்கு ! 6-1, 6-0, 6-1...


ஜான்...இன்று என்ன ஆயிற்று! இத்தனை மோசமாக நீ ஆடி இதுவரை பார்த்ததேயில்லை!
எனக்கே புரியாத குழப்பமாக இருக்கிறதே ராபின்!



ஹே மிஸ்டர் உளவாளி! உன்னை சந்தித்ததற்கு மகிழ்ச்சி! ஒரே ஒரு விஷயத்தை உன்னிடம் சொல்லத்தான் ஓடோடி வந்தேன்...



மதிய உணவின்போது ஒரு வகை பொடியை நாங்கள் கலந்து விட்டிருந்தோம்... CIA யின் செயல்திறனைப்பற்றி இனியும் உனக்கு சந்தேகம் இராது என்று நினைக்கி-றேன்...ஓ. கே!



நியூயார்க்குக்கும் இலண்டனுக்கு மிடையே நடந்த ஒரு ரேடியோ உரையாடல்...
'கண்ட்ரோல்'-பிரிட்டிஷ் உளவுத்துறையின் தலைவர்.
இருபத்திமூன்றிடமிருந்து கண்ட்ரோலுக்கு- கிழக்கு ஐரோப்பா செல்லும்போது ஒரு பார்சலை எடுத்துச்செல்லக் கோருகிருர்கள் CIA அதிகாரிகள்...
CIA அதிகாரிகள் ஏற்கனவே விபரம் அனைத்தையும் எனக்குத் தெரிவித்து விட்டார்கள்...ஆபத்தில்லாபணி,
அவர்களுக்கு நீங்கள் பட்டிருக்கும் கடனுக்கு ஈடாக அந்தக்கோரிக்கையை ஏற்று நிறை-வேற்றுங்கள்...!


ஜான் மாஸ்டரும் ராபினும் கென்னடி விமான நிலையத்தை சென்றடைந்தபோது...
இந்தா பார்சல்...வைத்துக் கொள்-பரமரகசியமாக இருக்கட்டும்!
நன்றி...உங்களுக்கு நான் பட்டிருக்கும் கடன் முழுவது மாக தீர்ந்துவிடும்.
வேண்டாத கவலை...! வா...வா...விமானத்தில் ஏறிக்கொண்டு விடுவோம்!
இந்தக்காரியத்துக்கு ஏன் தான் நம்மை தேர்ந்-தெடுத்தார்களோ?


கடைசி நிமிட பேட்டி ஒன்றை தட்டிக்கழிக்க முடியவில்லை...
ஜான்...! முதல்தர ஆட்டக்காரரான நீங்கள் ரஷ்யா செல்வதன் நோக்கம்...?
அங்கே விளையாட்டுபோட்டி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்...டென்னிஸ் ஆட்டத்தில் அவர்களுடைய தரம் வெகுவாக உயர்ந்து விட்டிருக்கிறது!


சற்றைக்கெல்லாம் அவர்களையும் சுமந்து கொண்டு விமானம் மேலேறி பறக்கத் தொடங்கியது...
அடுத்து மாஸ்கோதானா?
இல்லே...பெட்ரோல் நிரப்ப வழியில் இறங்கும்!
АЭРОФЛОТ


இந்தப் பார்சலுக்குள்ளே அப்படி என்ன இரகசியம் ஒளிந்து கொண்டிருக்கிறதோ- தெரியவில்லே!
பேசாமல் உள்ளே வை- ஆப்பை பிடிங்கிய குரங்கின் கதையாகி விடப்போகிறது...!


மாஸ்கோ...!


நல்லவேளை-பனி பெய்யக்காணோம்!
இது கோடை கால மாயிற்றே!


அவர்கள் தங்களுடைய பெட்டிகளை சேகரித்துக்கொண்ட பின்...
CUSTOMS
கஸ்டம்ஸில் சிக்கல் ஏற்படுமோ!
டென்னிஸ் வீரர்களை இவர்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்றே நம்புவோம்!


சூட்கேஸை இப்படி கொடுங்கள்...!
என்ன ஆகுமோ. தெரியவில்லை!


பின்னர் அவர்களுடைய கைப்பைகள் சோதனைக்கு உள்ளாயின ...
அந்தப் பார்சல் இதற்குள்ளே தானிருக்கிறது...!
இதன் உள்ளே என்ன இருக்கிறது...?
கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று ஜான் திகைத்து நின்றபோது!


ஆவ்...வெடி குண்டு!



அங்கே கூச்சலும் குழப்பமும் தலைதூக்கியது!
48



நியூயார்க்கிலிருந்து ஜானும் ராபினும் வந்த அதே விமானத்தில் வந்திரங்கிய ஒரு நெட்டை ஆசாமி அங்கிருந்து மெள்ள நழுவினான்...
திட்டம் முழு வெற்றி பெற்றுவிட்டது... எல்லோருடைய கவனமும் அந்த இரு சோதாக்களின் மீது இருக்கின்ற இவ் வேளையில் நிஜ பார்சலோடு நழுவும் என்னை யாரும் தடுக்க போவதில்லை!


ராபின்...திட்டமிட்டுத்தான் நம்மை வம்பில் மாட்ட வைத்திருக்கிறார்கள்-வா...ஓடிப்போய் விடலாம்!



அதோ ஓடுகிறார்கள்-குழப்பத்துக்குக் காரணமான விஷமிகள் பிடியுங்கள்!


இந்த கதவை தாண்டிவிட்டோ-
மானால் தப்பிவிடலாம்...!
அதுவரை தோட்டாக்-
கள் நம் உடலை
ஊடுருவிச் செல்லாமல்
இருந்தால் சரி...


மயிரிழையில் தப்பிவிட்டனர்..
டுமீல்! டுமீல்!


விமான நிலையத்தின் பிரதான கூடத்திற்குள் வந்து விட்டிருந்தனர்...
ஜன நடமாட்டமிருக்கும் இடத்தில் நம்மைக் குறி வைக்க மாட்டார்கள்...
அப்படியெல்லாம் நம்புவதற்கில்லை...!


எங்கே போவது...?
இங்கிருந்து எத்தனை தொலைவு விலகிச் செல்கிறோமோ அத்தனை நல்லது.


இதோ பெண்கள் ஆடை விற்பனைக்கூடம்!
உள்ளே நமக்கென்ன வேலை?


ஐந்து நிமிடங்-
களுக்குப்பின்...





மாயமாக மறைந்து
விட்டார்களே!
எப்படி சாத்தியம்?
நம்பவே
முடியவில்லையே!
தொடர்ந்து
தேடுங்கள்!


ராபின்! இந்த உடையில் அழகிய பெண்ணாக தோற்றமளிக்கிறாய் நீ!
சகிக்கவில்லை...! இந்தக் கண்றாவியை சீக்கிரமே கழற்றி எறிய முடிந்தால் தேவலை!


அங்கே பார்...விமான நிலையத்தை விட்டு வெளியேறும் ஒவ்வொருவருடைய அனுமதி பத்திரங்களையும் பரிசீலனை செய்கிறார்கள்...
கவலைப்படாதே-ஒரு சிறு தந்திரம் செய்து தப்பி விடலாம்!



இதை இங்கே வைக்கிறேன்-
அடுத்து என்ன நடக்கிறது
என்று பார்...


உன் புது
கண்டுபிடிப்பா!



மறு விநாடி·
பட்!
பட்!
பட்!
பட்!
பட்!


அங்கே ஏற்பட்ட குழப்பத்தில் அவர்களைக் கவனிக்க ஆளில்லை.


வெளியே வந்ததும்...
ஒரு வழியாக தப்பி வந்து விட்டோம். இனி...?
பிரிட்டிஷ் அதிகாரிகள் உதவிக்கு வருகிறார்களா என்று பார்ப்போம்...இரஷ்யாவை விட்டு வெளியேற சொந்த முயற்சியை மேற்கொள்வோம்!
பதுங்கிப் பதுங்கி பிரிட்டிஷ் தூதரகத்தைத் தேடிச் சென்றார் ஆனால்—
வாசலில் பலத்த காவல் போட்டிருக்கிறார்கள்... இந்த வழியாக உட்புக முடியாது...!
கட்டிடத்தின் பிற பகுதியிலும் இப்படித்தான் இருக்கும்.


ДЕТАРИИ
ОСТРИ
உதவி ஏதும் கிடைக்காது... சொந்தபலத்தை நம்பித் தான் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்!
ஆபத்து தங்களை பின் தொடர்ந்து வருவதை அறியாமல் நடந்து கொண்டிருந்தார்கள்...


வாருங்கள் காருக்குள்ளே- எங்களை ரொம்பவும்தான் இழுத்தடித்து விட்டீர்கள்!
முன்பின் அறியாத நபர்-களின் அழைப்பை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை...!



துப்பாக்கியை காட்டுகிறீர்களே!
இனி விவாதத்திற்கே இடமில்லை...!
பிரிட்டிஷ்காரர்களுக்கு நகைச்சுவை அதிகம் தான்! வேடிக்கைப் பேச்சு வேண்டாம்- ஏறுங்கள் காரில்.




உங்களை நேராக தலைமையகத்துக்கு கொண்டு செல்கிறோம்.


அத்தனை நெருக்
கடியிலும் ராபின்
தளரவில்லை-அவன்
சுபாவம்
அப்படி!



இன்னும் சில நிமிடங்களில் நாம் தலைமையகத்தை சென்றடைந்து விடுவோம்.
முக்கியமான சில கேள்விகளுக்கு உங்களிடமிருந்து பதில் பெற வேண்டியிருக்கிறது.




இதற்கிடையே ராபின் ஒரு சிறு இரகசிய பட்டனை அழுத்த-
மறு விநாடி...
அஹ...!
எ...எ...என்ன இது-எப்படி வந்தது இங்கே!





கண்ணிமைக்கும் நேரத்தில் காரின் உட்பகுதி முழுவதும் அடைத்துக் கொண்டு விட்டது அந்தப்பலூன்.
ஹே...பாதையை பார்த்து ஓட்ட முடியவில்லை...!


விளைவு?
ஆ ஆ ஆ...!



சீக்கிரம் வெளியே வந்துவிடு ஜான்!
இதோ...உன் பின்னாலேயே இறங்கிக் கொண்டிருக்கிறேன்!


பிரமாதமான கண்டுபிடிப்புத்தான்- சந்தேகமேயில்லே! தடைபோல் நின்று நாம் காயம்படாமல் தப்பிக்கவும் வகை செய்துவிட்டது.
அவ்வளவுதான் என்று எண்ணிவிடாதே... இப்போது பார்-



அதனுள்ளே நிரம்பி இருந்தது சாதாரண காற்று அல்ல- மயக்க வாயு!
புஸ்...!



இவர்களுக்கு சுயவுணர்வு திரும்ப பல மணி நேரம் ஆகலாம்.
உன் மாதிரி ஒரு அதிமேதாவியை தோழனாக அடைய நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.



ஆனால் இந்த அதிமேதாவியிடம் இரஷ்யா வை விட்டு வெளியேற திட்டம் ஏதும் கைவசம் இல்லை-நீதான் சொல்ல வேண்டும்!
வா...ஏதாவது லிஃப்ட் கிடைக்குமா என்று பார்ப்போம்!


இது எந்தத் திசையில
போகப் போகிறது
என்று கூடத்
தெரியாது.
இவன் நேராக KGB தலைமையகத்துக்கு ஓட்டிக்
கொண்டு போனுன் என்ருல் எப்படி இருக்கும்?
சும்மா வாயை
மூடிக்கொண்டு வா...


நல்ல வேளையாக லாரி
நகரை விட்டு வெளியே
போய்க்கொண்டிருந்தது.
அந்த மட்டிலும் நாம்
அதிர்ஷ்டசாலிகள் தான்.



வீடுபோல்
தோற்றமளிக்கிறது.
உடனே சாமான்களை
கீழிறக்கும் முயற்சியை
அவன் மேற்கொள்-
ளாமலிருக்க
வேண்டும்!



லாரியை நிறுத்தியதும் அதை ஓட்டிவந்த ஆசாமி திரும்பிக் கூடப் பார்க்காமல் கட்டிடத் தினுள் சென்று விட்டான்- இருட்டிய பின்...
மாஸ்கோவை விட்டு ஒரு வழி யாக வெளியேறி வந்து விட்டோம்...ஆனல் இங்கிலாந்து இன்னும் ஏகப்பட்ட தொலேவில் இருக்கிறது.
நேரடி பஸ் சர்வீஸ் இருக்க நியாயமில்லே!



ஹே...இதை பார்த்தாயா... பஸ் இல்லேதான் என்ருலும் நம் இருவருக்கும் போதுமானது!
இது நமக்காகவே காத்-துக்கொண்டிருப்பது போல் தோன்றுகிறது!


ஓசையின்றி வண்டியை கொஞ்ச தூரம் தள்ளிக்கொண்டு சென்று பின்னர் ஸ்டார்ட் செய்தார்கள்.
ரரபின் ஏறிக் கொண்டார்-
ஆமாம்! பைக் நின்ற இடத்தில் வாடகைப்பணமாக சில ரூபிள்களை போட்டுவிட்டு வந்திருக்கிறேன்!


இனி இதன் உச்ச பட்ச வேகத்தை சோதித்துப் பார்த்து விட வேண்டி-


டாங்க் நிறைய பெட்ரோல் இருக்கிறது என்கிற விஷயம் மகிழ்ச்சியை கொடுக்கிறது!
தங்கு தடையின்றி நீண்ட பயணத்தை மேற்கொள்ள முடியும்!


திடீரென்று மோட்டார் சைக்கிளை பக்கவாட்டில் திருப்பினார் ஜான் மாஸ்டர்...
ஏய்...ஏய் உனக்கு என்ன ஆச்சு- திடீரென்று..!


பயப்ப தே...வேண்டு
ன்றேதான்
இடி செய்தேன்...


புவிஞ்டி...
ஆ...செத்தேன்!


ஆவ...!


நல்லவேளை அடி ஏதும் படவில்லை!
திட்டமிட்டுத்தான் செய்தேன் இதை...!


எதற்காக திடீரென்று பைத்தியக் காரனைப்போல் வண்டியை பக்கவாட்டில் ஓட்டிறாய் என்று இப்போதாவது சொல்லித்தொலை!
அதோ அங்கே பார்! சாலையில் தடை ஏற்படுத்தியிருக்கிறார்கள்


ஒவ்வொரு வாகனத்தையும் சோதனை செய்கிறார்கள்... நேராக போயிருந்தால் நாம் வகையாக மாட்டிக் கொண்டிருந்திருப்போம்!



காட்டுப்பாதை வழியே வா...!
அதிர்ஷ்டவசமானது!


ராபின், ஹாய்யாக பயணத்தை ரசித்துக் கொண்டு வா!



வேறு எந்த சுற்றுலா பயணியும் ரஷ்யாவை இந்தக்கோணத்தில் கண்டு களித்திருக்க மாட்டான்!



இல்லையா...ராபின்!
ராபின்...?
ஹே...ராபின்?
என்ன பதிலைக் காணோம்?


தாழ்ந்த கிளைகளினூடே நீ செல்லும்
போது முன்னதாகவே எனக்கு
சொல் என்ன!


வேறு எவ்வித இடர்பாடும் இன்றி பயணம்
சீராக இருந்தது. விடியும் வேளையில்...
அதோ குறுக்கே ஒரு சாலை செல்-
கிறது பார்...நடமாட்டத்தையே
காணோம்...அதன் வழியே
சென்று பார்ப்போமா?


ஆனால் அவர்கள் சாலையை நெருங்கியதும்...
ஏ...ஏன் வேகத்தை குறைக்கிறாய்?
நான் குறைக்கவில்லை... அதுவாக குறைந்து விட்டது... பெட்ரோல் காலி!
இது என்ன புதுத் தொல்லை?


ரஷ்ய பீரங்கி வண்டி!
R.B.C. 1386


இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்-நடமாட்டம் தடை செய்யப்பட்டுள்ள பகுதி இது!


ராபின்...உனக்கு கொஞ்சம் ரஷ்ய மொழி தெரியுமே...பேசேன்...!


போச்சுடா சாமி! எதற்கெடுத்தாலும் நான்தானு அகப்பட்டேன்! நான் ரஷ்ய மொழியை மறந்து எத்தனை யுகமாச்சு தெரியுமா?
இவர்களை சமாளித்து விடலாம் என்று தோன்கிறது...!


ஆரம்பிப்போமா...!


மறுகணம் —
ஆஆ...வ்! சுடுங்கள் இவர்களை- கொல்லுங்கள்!


ஆ ஆ...!
டம்!
ஐயோ...!
இருவர் காலி-
இன்னும்
இருவர்தான்
பாக்கி!
உனக்கு சரியாக குறி வைக்கத்
தெரியவில்லையே!


நிறைய பயிற்சி தேவை!
அஹ்...!


ஆனுல் ராபின் வகையாக மாட்டிக்கொண்டு விழித்தான்.


மயிரிழையில் தப்பித்து விட்டேன்!
டுமீல்!
எதிரி இரண்டாவது முறையாக குறிவைத்தபோது ..
நன்றி ஜான்! கணப்பொழுது தாமதித்திருந்தாலும் பிண மாகிப் போயிருப்பேன்!
ஆ...!


வெற்றி பெற்று விட்டோம்!
ஆட்டம்...செட்... மாட்ச்-அனைத்திலும்!
நான் எதிர்பார்த்ததைவிட சுலபமாக சமாளித்து விட்டோம்!





ஆனால—
மாட்டிக்கொண்டு விட்டோம்...!





ஓடிவா ராபின்...தப்ப முடியாது என்று தெரிகிறது... முயன்று பார்ப்போமே!
இதோ... வந்துவிட்டேன்!



உனக்கு இதை ஓட்டத் தெரியுமா ஜான்?



டீ' பிளேட்டை தொங்க விட்டுக்கொண்டுதான் இதைநான் ஓட்ட வேண்டும்!


சே...எதிரிகள் நம் கொள்கையை பாராட்டுவதாகத் தெரியவில்லை-தாக்குகிருர்களே!
இதைவிட இன்னும் நெருக்கமாக வரத்துணிய மாட்டார்கள்!



எந்தப் பக்கம்
திரும்பப்
போகிருய்?
அருகிலுள்ள நகரத்துக்குள் செல்வோம்
வீடுகள் அருகில் இருந்தால் நம்மீது
குண்டுகளை வீசத்தயங்குவார்கள்!



நாம் நகருக்குள் வந்து
சேர்ந்து விட்டோம்!
எதிரிகள் பின்தொடர்ந்து
வந்து கொண்டிருக்கிருர்கள்.
ஏதாவது யுக்தி செய்து
தப்பிக்க வேண்டும்.


குறுக்குச் சாலையில் டாங்க்கை திருப்பி ஓட்டினார் ஜான். பின்னர் —
பயணம் இனிமையாக இருந்ததா ராபின்!
தூள்கிளப்பி விட்டாய் போ? ஆனால் இந்நேரத் திற்குள் சங்கதி பரவியிருக்கும்!



மேலதிகாரிகளுக்கு தகவல் போய் சேர்திருக்கும். ரஷ்ய படையில் பாதியாவது நமக்கெதிராக நடவடிக்கையில் இறங்கி இருக்கும்!



இந்த வீடு ஒளிந்து கொள்ள ஏற்ற இடமாக படுகிறது!
ஓடு சீக்கிரம்!
அங்கே ஓர் ஆச்சரியம் காத்திருந்தது அவர்களுக்கு!
அட...!
என் கண்களையே நம்ப முடியவில்லை!



ஒரு டென்னிஸ் விளையாட்டு அரங்கு! அங்கே விளையாடிக் கொண்டிருக்கும் ஒரு நபர் எனக்கு மிகவும் வேண்டியவர்!


பிரபல ரஷ்ய டென்னிஸ் ஆட்டக்காரர் செர்ஜி வாலண்டேவ்!


ஜான் மாஸ்டர்· நீயா...! இங்கே எப்படி...?
விவரமாக சொல்ல இப்போது அவகாசமில்லை... எங்களுக்கு உன் உதவி தேவை!
ரஷ்ய படையில் பாதி எங்களை துரத்திக்கொண்டு வருகிறது... நாங்கள் ஒளிந்து கொள்ள நீதான் வகை செய்ய வேண்டும்- எண்ணி மூன்றே நிமிடங்களில்!


ஐந்து நிமிட இடை வெளிக்-
குப்பின்...
படை வீரர்கள்
அங்கே வந்து சேர்ந்தனர்.



அவர்கள் கண்டதெல்லாம்-
இதைத்தான்!



என்ன இதெல்லாம்?
இடையூறுக்கு மன்னிக்க வேண்டும் காம்ரேட் வாலண்டேவ்! தப்பிவந்த குற்றவாளிகளை தேடிக்கொண்டு இங்கே வந்தோம்!
அப்படியா...சரி-நீங்கள் தேடுங்கள்... நாங்கள் ஆட்டத்தை தொடருகிறோம்!



மீண்டும் ஆட்டம் தொடர்ந்தது...
ஆட்டத்தைத்தான் பார்க்கிறார்களே தவிர ஆளைப் பார்க்கவில்லை... தேடிவந்த ஆசாமிகள் மறைவிடத்தில்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறேதுமில்லை!



தேடும் வேலை முடிந்து விட்டது காம்ரேட்... நாங்கள் புறப்படுகிறோம்!
ஓ...கே? போய் வாருங்கள்? காம்ரேட்ஸ்?


பிரமாதம், செர்ஜி! ஒரு கோடி நன்றி உனக்கு!
நன்றிசொல்ல இதுவல்ல நேரம்- ஆட்டம் பாதியில் நிற்கிறது .. தொடர்ந்து ஆடிமுடிப்போம் வா!



ராபின் அப்படியொன்றும் நல்ல ஆட்டக்காரன் அல்ல...!
ஊய்...!


முடிவில்-
வெற்றி எங்களுக்கே!
அடடா!...!



பின்னர்—
டென்னிஸ் விளை-
யாடாத சந்தர்ப்
பங்களில் வெப்பக்
காற்று பலூனில்
ஏறிப்பறப்பது
என் பொழுதுபோக்கு...இந்த பலூன் உங்க
ளிருவரையும் நாட்டு எல்லைவரை சுமந்து
செல்லும். சக்திவாய்ந்தது!
பிரம்மாதம்!



அன்றிரவு-
சீக்கிரமே பலூன் மேலேற
தேவையான அளவுக்கு
வெப்பக்காற்று
உட்புகுந்து கொள்ளும்.
ஜான்...நல்ல மனிதர்கள் நிறையப்
பேர்களை நீ தெரிந்து வைத்திருக்-
கிறாய் என்று புரிந்துகொண்டேன்!
இந்த உதவிக்கு என்றாவது பிரதி
உபகாரம் செய்ய நாங்கள்
கடமைப்பட்டவர்களாவோம்
செர்ஜி!



உங்கள் பயணம் வெற்றியடைய என் நல்வாழ்த்துக்கள்! உங்களுடைய இருக்-கைக்குகீழே சில பரிசுப் பொருட்கள் இருக்கின்றன...வழியில் உபயோகமாக இருக்கும்!
குட்பை...செர்ஜி! நன்றி!
இரண்டு தினங்களுக்குப்பின் என் பலூனை யாரோ திருடிச்சென்று விட்டதாக அறிக்கை விடுத்து விடுகிறேன்!
உனக்கு தொல்லை வராமல் பார்த்துக்கொள்!



புதுமையான அனுபவம்- இல்லையா ஜான்!
ஒரே நிசப்தமாக கிடக்கிறது! நமக்கு நல்லதுதான்!



விடியற்காலையில்-
ஆறுமணி நேரம் பயணம் செய்துவிட்டோம்... கணிசமான தூரத்தை நாம் கடந்து விட்டிருக்க வேண்டும்!
விடிந்து கொண்டு வருகிறது- வெளிச்சம்... நமக்கு எதிரி!



மறுகணம் தொல்லை பெரிய அளவில் வந்து சேர்ந்தது அங்கே...!
யுத்த விமானங்கள்!


ராடார் கருவி நம்மை அவர்களுக்கு காட்டிக் கொடுத்-திருக்கக்கூடும்!
தோழமையாக நடத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது!


இதோ...பார்த்தாயல்லவா! நான் சொன்னது சரியாகப் போய்விட்டது!



செய்தி தெளிவாக வருகிறது பார்...நாம் உடனே கீழே இறங்க வேண்டும்... மறுத்தால் அடுத்த இலக்கு நாம் தான்!


யுத்த விமான பைலட்டு களுக்கு வேடிக்கை விளை யாட்டெல்லாம் பிடிக்காது என்பது என் யூகம்… எதற்கும் இப்படியே- போக்குக்காட்டிப் பார்ப்போம்!



பதில் தாமதமின்றி வந்தது!


பட்! பட்! பட்!
படுபாவிகள்... நிஜமாகவே பலூனை குறி வைத்து விட்டார்களே!
பங்க்சர் ஒட்ட உபகரணங்கள் இருக்கிறதா என்று பார்..
இருக்கைக்கு கீழே ஏதோ இருப்பதாக செர்ஜி சொன்னானே...
ஆங்...! இதோ-


இரண்டு
பாராசூட்டுகள்!
சில விநாடிகளுக்குப்பின்-
ராபின்...நீயும்
குதித்துவிட்டாயல்லவா!
பலூன் அம்பேல்!
ஒரிரு நிமிடங்கள் நாம்
தாமதித்திருந்தாலும்
மாட்டிக்கொண்-
டிருப்போம்!



கீழே இருந்த காஸ் சிலிண்டர் வெடித்துவிட்டது பார்!
டமால்!


அங்கே பார்-நிலைமை சரியில்லை!


சுடுவார்களோ?
படுகொலை செய்யுமளவுக்கு கிராதகர்களாக இருக்க மாட்டார்கள் என்றே நம்புவோம்!


எதற்கும்...என்னுடைய சிறிய கண்டுபிடிப்பு ஒன்றை இப்போது பயன்படுத்தலாமே என்று நினைக்கிறேன்!


புகைக்குண்டு!


நல்லதொரு தடையாக நின்று நம்மைக்காக்கும்,


ஒரே ஒரு
சின்ன பிரச்னே...!


எப்போது தரையை தொடப்போகிறோம்
என்று நாம் பார்த்து தெரிந்துகொள்ள
முடி...யா...து...ஆவ்...


தரை இவ்வளவுகிட்டே
இருந்து
தொலைத்து விட்டதே!
காயம்படாமல் தரை இறங்கி
விட்டோமே-அந்த மட்டும்
தேவலாம்!


தகவல் அறிந்து தரைப்படை இங்கே
வந்து சேருமுன் எங்காவது
ஒளிந்து கொள்ள வேண்டும்.
ஏற்கனவே அவர்கள் இங்கே
வந்து விட்டிருக்கக்கூடாது!


யாரோ நம்மை கண்கா-ணித்துக் கொண்டிருக்கிற தாக பிரமை ஏற்படுகிறது ராபின்!
நம் இருப்பிடம் அவர்களுக்குத் தெரியும்...ஒரிரு நிமிடங்களில் அவர்கள் இந்த இடத்தை சுற்றி வளைத்துக் கொள்ளக்கூடும்...
ஜான்! ஆபத்து—அதோ...!


மறுகணம்...
ஹேய்...!
அஹ்...!
முரட்டு தோற்றம் கொண்ட அந்த ரஷ்யன் அவர்களை நோக்கிப் பாய்ந்தனர்...
என்ன ஏது என்று விசாரிக்காமலேயே தாக்க வருகிறானே...
கோடாரியின் தாக்குதலுக்கு நாம் தாக்குப்பிடித்தால் விசாரணையை பிறகு வைத்துக் கொள்வோம், என்று அவன் தீர்மானித்திருக்க வேண்டும்...



அக்ர்ர்...ர்ர்!
இலக்கிலிருந்து மின்னல் வேகத்தில் நகர்ந்து கொண்டுவிட்டனர் ஜானும்...ராபினும்...
சரட்!



ஓடித்தப்பிக்க முடியும் என்று தோன்றவில்லை...
அப்படியானால் 'திட்டம்-17' ஐக் கையாள வேண்டியதுதான்!


அக்ர்ர்...ர்ர்!
இம்முறை விளைவு வேறுமாதிரி இருக்கும்.


க்ர்ர்...ப்ப்!
நம் திட்டம் பலித்து விட்டது ராபின்...!
...ம்...ம்...அடுத்த கட்டத்துக்கு செல்வோம்!
கோடாரியை மரத்திலிருந்து பிடுங்க அவன் முயன்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி-
இந்தா... ஒன்று-
இந்தா...இரண்டு-
ஒன்று...
இரண்டு


இவனால் ஏற்பட்ட ஓரிருநிமிட தாமதம் தப்பியோடும் வாய்ப்பை வெகுவாகப் பாதித்து விட்டதாக கருதுகிறேன்.
உன் கூற்று நூற்றுக்கு நூறு சரியாகி விட்டது ஜான்! அங்கே மேலே பார்...



ரஷ்ய பாரசூட் அணியினர்!
எங்கே போனாலும் விட மாட்டார்கள் போலிருக்கிறதே!
அவர்களுக்கும் நமக்குமிடையே சில நூறு மீட்டர் தூரம் இடைவெளி இருக்கிறது!



இதோ நமக்கு 'போக்குவரத்து' வசதி வேறு கிட்டியிருக்கிறது!
வேகமாக ஓடக்கூடிய குதிரைகள்தானு?



அந்த ஆராச்சியை நடத்த இதுவல்ல நேரம்!
ஹே...துள்ளாதே!


நம்மை குறிவைத்து சுடுகிறார்கள்... பதுங்கிக்கொள்!
அந்த துப்பாக்கிகளைவிட ஆபத்தானவை இந்தக் குதிரைகள் என்பது என்னுடைய கணிப்பு...!


சுடும் எல்லைக்கு அப்பால் விலகி வந்து விட்டோம்-இனி ஆபத்துஇல்லை!
எனக்கென்னவோ இந்தக்குதிரையை விட்டு இறங்கும்வரை தொடர்ந்து ஆபத்து இருந்துவருவதாகத்தான் நினைக்கிறேன்!



சுமார் ஆறு மைல் தூரம் கடந்தபின்-
வாகன வசதியை மாற்றிக்கொள்வோமா!
ஆமாம்...குதிரை சவாரி அலுத்து விட்டது!


அதைத் தொடர்ந்து...
ம்...இன்னும் வேகமாக வா ராபின்!
இந்த சைககிள்-அந்த குதிரையைவிட மோசமாக இருக்கிறதே!


இருபது நிமிட பயணத்திற்குப் பின் ஒரு குன்றின் மேல் பரப்பில் இருந்தார்கள் அவர்கள்...
அப்பாடா...ஒரு வழியாக வந்து சேர்ந்துவிட்டோம், அதோ தெரி-கிறது பார்...அதுதான் நாட்டு எல்லே!
120



அதை தாண்டிவிட்டோமென்றால் பிறகு எந்தத்தொல்லையும் இராது...!


எப்படி தாண்டுவது...? அப்படியொரு முயற்சியை மேற்கொள்பவர்களை சுட்டுத்தள்ளுவதற்காகவே அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் அந்த தடியர்கள்.
அவர்களுடைய கவனத்தை திசைதிருப்ப ஏதாவது யுக்தியை கையாள வேண்டும்!



அதோ... நமக்கு ஒரு வாய்ப்பு வந்து சேர்ந்திருக்கிறது!



அவர்கள் நின்றிருந்த இடம் காவல் சாவடியிலிருந்து சற்று தள்ளியிருந்தது...
அலங்கோலமாக படுத்துக்கொள்... மிச்சத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்...
ஆகட்டும்... பாஸ்!



அதிர்ஷ்டம்தான்...என் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து வேகத்தை மட்டுப்படுத்துகிருன்!
ஆ...
ஸாரி தம்பி! எங்களுக்கு உன்னுடைய லாரி கொஞ்ச நேரத்துக்கு தேவைப்படுகிறது!
ஆஆஆ...!
கொஞ்ச நேரம் அமைதியாக தூங்கு அப்பனே...!
கும்!
ஹா...



வண்டியை திருப்பி நிறுத்தி சில சில்லறை விஷமங்களையும், செய்து விட்டேன்... திட்டத்தை செயல்படுத்துவோமா!
சாலையில் வேறு போக்கு வரத்து இல்லாமலிருப் பதும் நம் அதிர்ஷ்டம்தான்!



இது ஸ்டார்ட் ஆகி ஓடத் தொடங்கியதும் நாமும் ஓட்டம் பிடித்துவிட வேண்டும்!
ரெடி...!



லாரி வேகம் பிடித்து ஓடத் தொடங்கியதும்...



அசுர வேகத்தில் அங்கு வந்து சேர்ந்த
லாரி நிறுத்தப்படும் அறிகுறி
தென்படாமற் போகவே-


தோட்டாக்கள் சரமாரியாக பறந்தன...
டமால்!


ஆனால் உள்ளே ஓட்டுநர் யாரும் இருக்கவில்லை!



அபாய எச்சரிக்கை அலறியது...
ஊ ஊ ஊ ஊ ஊ



தடையை தகர்த்துக்கொண்டு முன்னேறியது லாரி...
மறுகணம் பலத்த வெடியோசை எழுந்தது.
சுற்றிலும் காவல் காத்து நின்ற ரோந்துப் படையினர் அனைவரும் அங்கே விரைந்தோடி வந்தனர்...



சுமார் 500 மீட்டர் தொலைவில்...
எல்லோருடைய கவனமும் அங்கே இருக்கிறது.
நம்மை கண்டு கொள்வார் எவரும் இலர்!


உபயோகமாக இருக்கும் என்று இதை அந்த லாரியிலிருந்து எடுத்து வைத்துக்கொண்டிருந்தேன்.
இதைவிட உபயோகப்படும் வேறொன்றை நான் எடுத்து வந்திருக்கிறேன்...


எண்ணி இரண்டே நிமிடங்களில் வேலே கச்சிதமாக முடிந்துவிடும்,
ஒரு வழியாக பிரச்னே ஓய்ந்தது...!
இல்லே-அங்கே பார்...!


வேட்டை நாய்கள்





சமாளிக்க முடியுமென்று தோன்றவில்லை...
பதருதே...நான் தயாராகத்தான் வந்திருக்கிறேன்!


இப்படியொரு அசம்பா
விதத்தை எதிர்பார்த்து
இந்த மாமிச துண்டங்களை
அந்த லாரியிலிருந்து
எடுத்து வைத்திருந்தேன்-
131


இந்தாருங்கள்... எங்கள் அன்புப்பரிசு!



அவை சுவாரஸ்யமாக தின்று கொண்டிருக்கும் தருணத்தில் ஓடிப்போயிடலாம் வா!


திடீரென்று இயந்திர துப்பாக்
கியின் முழக்கம் கேட்டது.
நம்மை பார்த்துவிட்டார்கள்...!


ஓடி வர்...ர்பின்...!
கடைசி நேரத்தில் இப்படி ஒரு கழுத்தறுப்பா...சே!


டுமீல்!
ஆஆ...!


அடி பலமா?
ஆமாம்...இனி ஓட முடியாது என்னால்- என்னை விட்டுவிட்டு நீ...நீ மட்டுமாவது தப்பிச் செல்ல முயற்சி செய்!


மறுபடியும் எச்சரிக்கை விடுக்கும் வகையில்
சுடுகிறார்கள்.. அடுத்த தடவை நம்மை
குறிவைக்க தயங்க மாட்டார்கள்!
ஜா...ஜான் என்
முதுகில்...


சில வெடிகள் இருக்கின்றன.
எடுத்து உபயோகித்துக்கொள்!


நம்மை மடக்கி விட்டதாக எண்ணி ஓய்ந்து போயிருக்கிறார்கள்-நான் அதிரடியில் இறங்கியதும் திணறப் போகிறார்கள்.




டமால்!
வா...இங்கிருந்து வெளியேறிவிடலாம்!


எல்லையின் மறுபக்கம் இருந்த
வீரர்கள் தோழமையோடு
அவர்களை வரவேற்றனர்.


ஜான்...எ...என்ன நடந்தது?
நாம் தப்பிவிட்டோம் ராபின்-இனி கவலைப்பட ஏதுமில்லை!


விரைவில் இலண்டன் திரும்பினர்.
தலைவரை சந்திக்க மனத்தை திடப்படுத்திக்கொண்டு விட்டாயல்லவா?
எனக்கென்னவோ பயமாகத்தானிருக்கிறது!
தலைவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது...
இம்மாதிரியானதொரு அசட்டுத் தனத்தை இதுவரை யாரும் செய்ததில்லை...ரஷ்யா நம்மோடு ராஜீய உறவுகளை முறித்துக் கொண்டுவிடப்போவதாக அச்சுறுத்துகிறது!



அனைத்துக்கும் மேலாக உளவுத்துறையோடு உங்களுக்கு தொடர்பு உண்டு என்கிற உண்மையை இரகசியமாக வைத்துக்கொள்ளத் தவறிவிட்டீர்கள்...உடனே
இராஜினாமா கடிதத்தை எழுதிக்கொடுத்துவிட்டு எங்காவது ஓடிப் போங்கள்-என் கண் முன் நிற்காதீர்கள்!
உங்களுடைய அடையாள அட்டைகளையும் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் அவற்றை வைத்துக்கொள்ள இனி உங்களுக்கு அருகதை இல்லை!
நாம் வெளியேறுவதில் ஆசாமிக்கு பரம சந்தோஷம்போல் தோன்றுகிறது!


அப்படியெல்லாம் ஒன்றுமில்லே-நான் என் கடமையைத்தான் செய்கிறேன்!
ம்...வேறு ஏதாவது உங்களிடம் தங்கிப்போயிருக்கிறதா-சிறு வெடிகள், புகை குண்டு இம்மாதிரி...?
உன் சம்பந்தப்பட்ட விஷயம் போலிருக்கிறது ராபின்!
ஆமாம்... ஒன்றிரண்டு இருக்கின்றன...


இதோ...எல்லாவற்றையும் வெளியே எடுத்து வைத்து விட்டேன்.
டாடா! போய்வருகிறோம்!
அவற்றில் ஒன்றிரண்டு தானியங்கி முறையில் வெடிக்கும் அமைப்புடையவை என்ற உண்மையை கூறி எச்சரிக்க மறந்துவிட்டேனே...!



அவராகவே இப்போது தெரிந்து கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்!
அவருக்கு ஆயுள் கெட்டி என்றால் பிழைத்துக் கொண்டு விடுவார்!
அடேய...சைத்தான்களா-நில்லுங்கடா-உங்களை...


வேலை போச்சு...நம் எதிர்காலமே கேள்விக்குறியாகி விட்டது!
இனி நான் டென்னிஸ் ஆட்டத்தில் முழு மூச்சாக கவனம் செலுத்தப்போகிறேன்...அங்கே திறமைக்கு அதிக வாய்ப்பு உண்டு!



மிட்லாண்ட்ஸில் அடுத்த வாரம் ஒரு போட்டி நடக்கவிருக்கிறது...உடனடியாக என் பெயரை பதிவு செய்து கொள்ளப்போகிறேன்...
நானும் உன் கூடவே வருகிறேன் ஜான்...! உன்னுடைய டென்னிஸ் ஷூவை தூசிதட்டும் வேலையையாவது செய்து கொண்டிருப்பேன்!


மறுநாள்-
முதல் வகுப்பு பெட்டியா...? இரயிலின் முகப்பில் இருக்கிறது ஸார்!


அரசாங்கம் இனி நமக்கு ஒரு காசுகூட தரப்போவதில்லை- இப்படி முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய கட்டுப்படியாகுமா?
நிலைமை ரொம்ப மோசமாகி விடாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது-நடக்கப் போகும் பந்தயத்தில் முதல் பரிசான ஐயாயிரம் பவுண்டுகளை நான் வென்று விடமுடியும்!


Inter-City 125
எந்தப் பொறுப்பும் இல்லாமல், சுதந்திர உணர்வு இதமாக இருக்கிறது.
என்னுடைய சின்னச்சின்ன 'விளையாட்டுச் சாமான்கள்' எதுவும் கைவசம் இல்லாதது எல்லாவற்றையுமே இழந்துவிட்டாற்போல் சோகமாக இருக்கிற்து எனக்கு!
அடுத்த ஸ்டேஷனில்-
அந்த ஸீட்டில் யாரும் வருகிருர்களா?
இல்லை-நீங்கள் தாராளமாக அமரலாம்!


நீங்கள் பிரபல டென்னிஸ் ஆட்டக்காரர் ஜான் மாஸ்டர்தானே! என் மருமகனுக்காக இந்த ஆட்டோகிராப் புத்தகத்தில் கையெழுத்திட்டுத் தர முடியுமா?
ஓ...யெஸ்-தாராளமாக!


அரைமணி நேரம் கழித்து-
நான் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டது. உங்களை சந்திக்கவும் உங்களோடு பயணம் செய்யவும் கிடைத்த அரிய வாய்ப்புக்கு மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்...உங்கள் பயணம் நல்லபடியாக தொடர என் நல் வாழ்த்துக்கள்!


இன்னும் ஒரு மணி நேர பயணம் பாக்கியிருக்கிறது.
அழகான ரசிகைகள் யாரேனும் வந்து என்னைச்சந்தித்து நெடு நாட்களா யிற்று...அதில் ஒரு தனி சுகம் இருக்கத்தான் இருக்கிறது...ஹூம்!
அட...சிறு பார்சல் ஒன்றை அந்த ஆசாமி மறந்து இங்கே விட்டுச்சென்று விட்டாரே!
கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் அலுவலகத் தில் ஒப்படைத்து விடலாம்;


இல்லே.. ! உள்ளே ஏதோ 'டிக் டிக்' என்று ஓசை கேட்கிறது!



அலாரம் டைம்பீஸாக இருக்கக்கூடும்!
சந்தேகமாக இருக்கிறது- வெடிகுண்டு என்பது என் யூகம்!


டைம் பாமா...?
ஆமாம்... அப்படித்தானிருக்கும்!


விலகிக்கொள்ளுங்கள்!


இது போய்ச் சேரவேண்டிய இடம் ஒன்றே ஒன்றுதான்...
ரயிலுக்கு வெளியே- முடிந்தவரை வெகு தொலைவில்...!
மறுகணம்-
டமால்!


மயிரிழையில் தப்பிவிட்டோம்...!
யார்...எதற்காக நம்மை தீர்த்துக்கட்ட முயற்சிக்கிறார்கள்?
நாம்தான் பிரிட்டிஷ் உள்த்துறையோடிருந்த உறவை ஏற்கனவே துண்டித்துக் கொண்டு விட்டோமே!
...காரணமே அதுவாகத் தானிருக்க வேண்டும்!
பிரிட்டிஷ் உளவுத்துறையின் முயற்சிதான் இது. நாம் அவர்களுடைய இரகசியங்களை நிறைய தெரிந்துவைத்துக் கொண்டிருக்கிறோமல்லவா...


நம் வாயை நிரந்தரமாக மூடிவிட அவர்கள் விரும்பக்காரணமுண்டு.
நீ சொல்வதில் அர்த்தமிருக்கிறது ஜான்!


பயண முடிவில்-
இதையெல்லாம் கதைகளில் படித்திருக் கிறேன். ஆனால் நடைமுறையில்-



டமீல்!
இன்னமும் உனக்குச் சந்தேகம் இருக்க நியாயமில்லை என்று நினைக்கிறேன்...!


வேறு அசம்பாவிதம் ஏதுமின்றி ஹோட்டலைச் சென்றடைந்தனர்.
இனி எந்த நிமிடமும் ஆபத்தை எதிர்பார்த்துக்கொண்டு நிம்மதியற்ற வாழ்க்கை வாழ வேண்டியதுதானா?
இல்லை ராபின்... அதற்கு ஒரு வழி இருக்கிறது!


பிரிட்டிஷ் உளவுத்துறை பற்றி நாம் அறிந்துள்ள அனைத்து இரகசியங்களையும் எழுதி, எல்லா முக்கிய பத்திரிக்கை அலுவலகங்களுக்கும் அனுப்பப் போகிறேன்! நமக்கு ஏதேனும் நேர்ந்தால் மட்டுமே இந்தக் கவர்களை உடைக்குமாறு ஏற்பாடு!


விஷயத்தை நம்முடைய முன்னாள் தலைவரின் காதிலும் போட்டுவிட வேண்டும்!


உங்களுக்கு அவ்வளவாக மகிழ்ச்சி ஏற்படுத்தாத செய்தி ஒன்று—நாங்கள் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறோம்! இப்படியே பத்திரமாக வாழ நிரந்தரமாக ஒரு ஏற்பாட்டையும் செய்துள்ளேன்!
ஐந்து நிமிடங்களுக்குப் பின்-
விஷயத்தை புரிந்து கொண்டாரா?
ஓ. தெளிவாக! இனி அவர்களிடமிருந்து நமக்கு எந்தத் தொல்லையும் வராது... நிம்மதியாக நாட்களை கழிக்கலாம் நாம்...
அடுத்து நடைபெற்ற டென்னிஸ் பந்தய தொடரில் மிகப் பிரமாதமாக ஆடினார் ஜான் மாஸ்டர்...







லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும் :
S. விஜயன், முகவரி : லயன் காமிக்ஸ், த. பெ. 55,
சிவகாசி - 626 123. போன்: 1159 வெளியீடு எண்: 23
அச்சிட்டோர் : முத்து பைன்ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.



லயன் காமிக்ஸ்
பெருமையுடன் வழங்கும்
கோடை மலர்!
சூப்பர் சாகஸ வீரர்கள்
C.I.D. லாரன்ஸ் & டேவிட்
தோன்றும்
காணாமல் போன விஞ்ஞானி!
நகைச் சுவை
ஹோடி
விச்சு & கிச்சு
லயன் காமிக்ஸ்
உங்கள் நண்பன்
ஆர்ச்சி துப்பறியும்
மோசடி!
இரட்டை வேட்டையர் தோன்றும்
கொலை வெறியன்!
விடுமுறை முழுவதும்
வீட்டிலுள்ள அனைவரும்
ரசித்துப் படிக்கக் கூடிய
அற்புத சித்திரக் கதை
குவியல்!



வால்ட்டிஸ்னியின்
ஈகிள் மேன்
தோன்றும்
மே - 1 ல் வருகிறது!
விசித்திரக் கடத்தல்!
ஈடு இணையற்ற
ஸ்பைடர்
தோன்றும்
ரூ. 5/-
காமிக்ஸ் பிரியர்களுக்கு இது மறக்க முடியாததொரு விருந்து!
இரும்புக்கை
உளவாளி தோன்றும்
பனிமலையில் ஒரு ரோஜா!
எட்டு சூப்பர் சித்திரக் கதைகள்!
320 பக்கங்கள்
32 பக்கங்கள் முழு வண்ணத்தில்
ஒரு சூப்பர் கலர் போஸ்டர் இதனுடன் போனஸ்!
வளவளப்பான கண்ணாடி அட்டை!

# வாசகர் கடிதம்!

● **S. ஜெயராமன், சென்னை-1.**

சதுரங்க வெறியன் அருமை! ஸ்பைடர் சாகஸம் மிக பிரமாதம்! ஸ்பைடர் கதைகளில் இது ஒரு மணி மகுடம். ஆர்டினியின் வஞ்சனையும் தள்ளி அவனை தொடர்ந்து தன் சகாவாக வைத்துக் கொள்வது- ஸ்பைடரின் பண்பை காட்டுகிறது!

● **K. காளி, அன்டர்பேட்டை.**

குற்றவியலின் முடிசூடா மன்னன், எத்தனுக்கு எத்தன், வலை துப்பாக்கி மன்னன், என்றெல்லாம் பெயர் பெற்ற ஸ்பைடரின் சாகஸங்கள் தொடரட்டும்! ஸ்பைடரை எதிர்க்கும் புதுப்புது வில்லர்கள் தோன்றட்டும், அதை நாங்கள் கண்டுகளிக்கின்றோம்.

வாழ்க லயன் காமிக்ஸ்,

● **R. நாகராஜன், கிருஷ்ணபுரம்.**

கோடை மலரில் 8 கதைகளா? அதுவும் 5 ரூபாயில். ஒரே கொண்டாட்டந்தான். சதுரங்க வெறியனில் ஸ்பைடர் வருகின்ற ஒவ்வொரு இடமும் தூள். அட்டைப் படமோ பளபள சதுரங்க வெறியன் எங்களுக்கு ஒரு விருந்து. சந்தேகமே இல்லை.

● **M. முருகன்தெய்வேந்திரன், M. கணேசன்—**
**மதுரை-17.**

கோடை மலரில் என் அபிமான C.I.D. லாரன்ஸ் கதைகள் படிக்க ஆவலாக இருக்கிறது அதுவும் ஒரே இதில் எட்டு கதைகள் விடும் ஒரே காமிக்ஸ் அதுதான் இந்த சிங்கம்.

● **ஜி. முரளி, கோயமுத்தூர்.**

நீண்ட நாளைக்குப் பிறகு ஒரு ஸ்பைடர் சாகஸம், ''கோடை மலர்'' மே ஒன்று அன்றே வெளியிடுங்கள் பிளீஸ் I am veryEager!

● **A. பரிமளநாதன், திருப்பூர்-4**

பிப்ரவரி லயன் காமிக்ஸை சுவைத்தேன். ஸ்பைடரின் வீர சாகஸம் கண்டு மலைத்தேன்! ஐந்து ரூபாயில் எட்டு கதைகளா திகைத்தேன்! லயன் காமிக்ஸ்ஸை பத்திரப்படுத்தி வைத்தேன்!




**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்**, த. பெ. எண்: 374,
போன்: 1159, 159. சிவகாசி - 626 123. 161


'அடுத்த வெளியீடு!
இரும்பு மனிதன்
தோன்றும்
தங்க வேட்டை!
லயன் காமிக்ஸ்
பாக்கெட் சைஸ்!
விலை ரூ. 2/-



விற்பனையாகிறது!
திகில்! காமிக்ஸ்
திகில்!
காமிக்ஸ்
ரூ. 3/.
ஆசிரியர்:
ட.விஜயன்.